★ விலைரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU

(1959 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 ஐப்பசி 6 முஹறம் 16 இதழ் 25?

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23 10-83

# மட்டுநகர்சிறைஉடைப்புக்கு

## ஒரு இயக்கம் உரிமை கோருகிறது!

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு சிறைஉடைப்பு சம்பவத்திற்கு 'ஈழமக்கள் புரட்சி விடுதலை முன்னணி' என்ற புதிய இயக்கம் சுவரொட்டிகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் உரிமை கோரியுள்ளது.

இது தொடர்பான சுவரொட்டிகள் யாழ்ப்பாண நகரின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

ஈழமக்கள் புரட்சி விடுதலை முன்னணியும், மற்ருெரு இயக்கமும், சில தனிப்பட்டவர்களும் சேர்ந்தே இச்சிறை உடைப்பை நடத்தியதாக அச் சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தின் ஆயுதப் படையான 'மக்கள் விடுதலைப் படையே, மட்டக்களப்பு சிறையை உடைத்து, சிறையிலிருந்தவர்களை மீட்டதென அச்சுவரொட்டியில் கூறப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறையில் உயிர் நீத்தவர்களுக்கும் தங்களது சிவப்பு வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு, கறுப்பு நிறங்களில் ஒட்டப்பட்டுள்ளஇச்சுவரொட்டிகளை பெரும்தொகையான மக்கள் பார்வையிடுகின்றனர்.

28 செந்தோழர்கள் உட்பட 58 போராளிகளை சிறையிலி

(8ம் பக்கம் பார்க்க)

★ அமிர்தலிங்கத்தின் மகன் பகிரதனின் மைத்துனர்

# வள்ளுவன் விடுதலை!

# மலேஷியா சென்ருர்!!

(நமது நிருபர் என். எம். கந்தசாமி)

அமிர்தலிங்கத்தின் மகன் பகிரதனுல் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதங்களைக் கொண்டுவந்தபோது, மன்ஞரில் கைதான இளைஞர் வள்ளுவன் விடுதலையாகி, மலேஷியா சென்றுவிட்டார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை காலை 8–15 மணிக்குப் புறப்பட்ட 'ஏர் லங்கா' விமானத்தில் தாயார் மகேஸ்வரி இராசலிங்கம், இளைய சகோதரி கயல்விழிஆகியோருடன் சென்ருர்.

இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மூலமாக தலைமன்ஞரில் வந்து இறங்கி அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் போது மன்ஞரில் சில கடிதங்களுடன் வள்ளுவன் என்ற இந்த இளைஞர் ராணுவத்தினரால் கைதாகியிருந்தார்.

டி. வி. யிலும், கொழும்பு வானெலியிலும் இவரது பேட்டிகள் ஒலிபரப்பப்பட்டன. சென்னையில் படிக்கும் தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கத்தின் இளைய மகன் பகிரதன் (ரவி) சமீபத்தில் திருமணம் செய்து கொண்ட மலர்விழிஎன்பவரின் சகோதரரே இந்த இளைஞன். இவர் இலங்கை வரும்போது சில கடிதங்களை மைத்துனர் பகிரதன் இவரிடம் கொடுத்து விட்டதாகவும் அதில் ஒரு கடிதம் மாவை சேனுதிராஜாவுக்கு எழுதப்பட்டதாகவும் ஒலி

(8ம் பக்கம் பார்க்க)

## மேற்கிந்தியாவின் ஆபார ஆட்டம்

## இந்தியா 5-34

[கான்பூர்]

இந்திய - மேற்கிந்திய அணிகளுக்கிடையே கான்பூரில் நடைபெறும் 1வது கிரிக்கெட் டெஸ்டின் 2ம் நாள் ஆட்ட முடிவில் இந்தியாமுதல் இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களை மாத்திரமே எடுத்துள்ளது.

கவாஸ்கர், ரவிசாஸ்திரி, அமர்நாத் ஆகியோர் ஓட்டம் எதுவும் எடுக்காமலும், கைக்குவாட் 4, வெங்சாகர் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். மல்கெம்மார்ஷல்4விக்கட்

(8ம் பக்கம் பார்க்க)

## "இலங்கைத்தமிழர் பிரச்னை: சர்வதேச விவகாரம்!"

### கொழும்பு திரும்பமுன் தொண்டமான் பேட்டி

சென்னை, அக். 22

"இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வு அரசாங்கம்—தமிழர் விடுதலைகூட்டணி பேச்சுவார்த்தையில்மட்டும் தங்கியிருக்கவில்லை. இப் பிரச்னை இன்று சர்வதேசப் பிரச்னையாகிவிட்டது".

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் நேற்றுக் கொழும்பு திரும்ப முன்னர் திருச்சியில் வைத்து பி. ரி. ஐ. நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

திரு தொண்டமான் அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னை தொடர்பாக நான் இந்தியத் தலைவர்களுடனும்,

(8ம் பக்கம் பார்க்க)

## முகமூடியணிந்த இளைஞர் பலாலியில் கொள்ளை!

### 'ரகசியப் பொலிஸ்' என்று கூறிக் கைவரிசை!!

(மாவிட்டபுரம்)

முகமூடியணிந்து துப்பாக்கிகளுடன் வந்த நான்கு இளைஞர்கள் நள்ளிரவுவேளையில் வீடொன்றுக்குள் நுழைந்து 13 பவுண் தாலிக்கொடியை 10 ஆயிரம் ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பலாலியில் சுப்பிரமணியம் தம்பிராஜா என்பவரின் வீட்டில் இக்கொள்ளை நடைபெற்றுள்ளது.

வீட்டின் வெளி விருந்தையில் படுத்திருந்த தம்பிராஜா தம் காலில் ஏதோ இடறப்படவே எழுந்து பார்த்த பொழுது நான்கு இளைஞர்கள் முகமூடியுடன் காணப்பட்டனராம், ஒரு றிவால்வரும் மற்றவர்கள் துப்பாக்கியும் கையில் வைத்திருந்தனர்.

[8ம் பக்கம் பார்க்க]

## "ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர் இந்தியாவில் தஞ்சம்!"

### ஐ. நா. வில் தமிழக அமைச்சர் ராமச்சந்திரன்

நியூயோர்க், அக். 22

"இலங்கையில் அண்மையில் நடந்த இனக்கலவரங்களையடுத்து ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்குப் புகலிடம் தேடி வந்துகொண்டிருக்கின்றனர். அவர்கள் இலங்கையில் தொடர்ந்தும் பாதுகாப்பாக வாழக்கூடிய சூழ்நிலை காணப்படாமையே இதற்குக் காரணமாகும். ஆனல் அவர்களைத் தொடர்ந்தும் பாதிப்படையவிடாது சம உரிமைகளுடன் இலங்கையில் வாழச்செய்வதே இந்தியா கொண்டுள்ள விருப்பமாகும்."

ஐ. நா. சபையின் விசேட அரசியல் கமிட்டிக் கூட்டத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய தமிநாடு மின் துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. இராமச்சந்திரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

(8ம் பக்கம் பா...

### இலங்கைபிரதிநிதி மறுப்பு

நியூயோர்க் அக் 22

"இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாகத் தினமும் இந்தியா வந்து கொண்டிருக்கிருர்கள்" என்று தமிழ்நாடு மின்சாரத்துறைப் அமைச்சர் திரு. இராமச்சந்திரன் ஐ. நா. சபையின் விசேட அரசியல் கமிட்டி கூட்டத்தில் தெரிவித்த குற்றச்சாட்டை இலங்கைப்பிரதி திரு பொன்சேகா மறுத்துள்ளார்.

ஐ. நா. சபையின் விசேட அரசியல் கமிட்டி கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இக் குற்றச்சாட்டை மறுத்தார்.

"இலங்கையிலிருந்து பெருமளவில் இந்தியாவுக்குச் சென்றவர்கள் இந்தியப்பிரஜைகளே என்றும் அவர்கள் அகதிகள் அல்ல என்றும் திரு. பொன்சேகா தெரிவித்தார்.

(லெ)

Saibaba

ADVERTISING ASSOCIATES

வாரமலர் அறிமுகம்

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் தமிழ் வாரமலர் ஒன்றுக்கு தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், விமர்சகர்கள் மற்றும் பலதுறை விற்பன்னர்களிடமிருந்து விடயதானங்கள் வரவேற்கப்படுகின்றன.

பத்திரிகை — நிர்வாகம், விளம்பரம் சேகரிப்பு, விற்பனைநியமனங்கட்கு விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.

தொடர்பு:

சாயிபாபா

அட்வர்டைசிங்

அசோசியேற்ஸ்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(9478)

ISLAND INSTITUTE

58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

84 புதிய பிரிவுகள் ஆரம்பம்!!

பகல் நேர வகுப்புகள்: 1-11-83

வார இறுதி வகுப்புகள்: 5-11-83

பொருளியல் — சின்னத்தம்பி

கணக்கியல் — யோகன்

வர்த்தகம் — தேவா, குமார்

அளவையியல் — மனேகரன்

புவியியல் — சண்

தமிழ், இந்துநாகரீகம் } குமரன்

அரசியல், வரலாறு } தர்மலிங்கம்

(9382)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

டாக்டரின் பாவனையிலுள்ள 8 ஸ்ரீ ஐயாயிரம் தொடர் இலக்கத்தையுடைய மொறிஸ் ஒக்ஸ்போட் கார், ஸ்ராண்டட் என்ஜின் விற்பனைக்குண்டு, மெடிக்கல்சென்ரர், கூளாவடி, ஆனைக்கோட்டை. டெலிபோன்: 23449. (9450)

சங்கானை சாந்தி தியேட்டருக்குக்கிட்ட யாழ்ப்பாணம் காரைநகர் வீதியில் மின்சாரக் கம்பத்துக்குப் பக்கத்திலுள்ள 4 பரப்பு வீடு கட்டக் கூடிய நிலம் கிணற்றுடன் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: கு. கதிர்காமத்தையா ஆசிரியர் சித்தங்கேணி. 9461

7 ஸ்ரீ 7000 தொடர் இலக்கத்தைக்கொண்ட பேஜோ 404 (வெள்ளைநிறம்) விற்பனைக்குண்டு. முகவரி: S மோகன், 28, கொழும்புத்துறை வீதி, (காட்டுக் கந்தோர் வீதிக்கு எதிரே), யாழ்ப்பாணம். 9466

யாழ்ப்பாணம் கச்சேரி, டொன் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் மருதடி ஒழுங்கையில் இரண்டரைப் பரப்புக்காணி உடனடியாக விற்கப்படும். தளையசிங்கம் 'சொர்ணகிரி', காங்கேசன் துறை வீதி, (கொக்குவில் சந்திக்கு அண்மை), கொக்குவில். 9470

புதிய Casiotone 403 Electronic Organ (40 Ctaves- 25 Instruments-16Auto Rhythms) விற்பனைக்கு அல்லது மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டருடன் மாற்றுவதற்கு. V. தர்மலிங்கம் (Proctor), மாதனை, பருத்தித்துறை. 9397

பீச் றேட்டில் கஸ்டம்ஸ் ஆபீசுக்கு அருகில் இரு குடும்பங்கள் வசிக்கத் தகுந்த அல்லது தொழிற்சாலைகள் ஆரம்பித்து நடத்துவதற்கேற்ற வசதிகளைக்கொண்ட 11 அறைகளைக்கொண்ட மேல்மாடியுடைய இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள நல்ல தண்ணீர் வசதியுடைய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி ந. கனகேஸ்வரி, இல. 6, 2ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 9459

Honda C90 Econo-Power 86 ஸ்ரீ 9000 தொடர் மோட்டார் சைக்கிள் நல்லநிலையில் உடன் விற்பனைக்குண்டு. Hitachi இரண்டு கதவுடைய (Fully automatic) குளிர் சாதனப் பெட்டியும், விற்பனைக்குண்டு. தொடர்பு: திருச்செல்வம், 123, பிரதான வீதி, யாழ்ப்பாணம். போன்: 22561 9475

WVP - 50N நஷனல் கலர் வீடியோ கமரா (Auto Focus), பனசோனிக் போட்ரேபிள் வீடியோ கசற்றெக்கோடர் NV - 100, பனசோனிக் வீடியோ ரியூனர் NV - V 10, நஷனல் NV 7000 வீடியோ கசற் றெக்கோடர், Hitachi 20'' கலர் T V புதிய நிலையிலுள்ளது. உடன்விற்பனைக்குண்டு. நேரில் வரவும். ராஜு சாமிக்காடு இல்லம், வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை. 9373

நாவற்குளி ஸ்டேசனிலிருந்து கால் மைல் தொலைவில் கண்டி றேட்டில் கிணற்றுடன் கூடிய இரண்டு, நான்கு பரப்புகாணிகள் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு கொள்க: பாலகுருசாமிசர்மா, குடியிருப்பு, சுவிபுரம். 9428

## விற்பனைக்கு

சங்கத்தானை இந்துக் கல்லூரிக்கு பின்பக்கமாக சிறிய வீட்டுடன் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. V, குமாரசாமி, 188, கண்டி வீதி, சாவகச்சேரி என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 9398

யாழ் மாநகரசபை எல்லைக்குள் நாச்சிமார் கோவிலடிக்கு சமீபமாக கே. கே. எஸ். றேட்டு கரையில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. M. தங்கராஜா அங்கலின் ரெக்ஸ் ரைல்ஸ் இல 43, நவீனசந்தை யாழ்ப்பாணம் தொலைபேசி; 22649 (9365)

புத்தம் புதிய இன்டெசிற் ஹிருண்டோ (INDESIT-HIRUNDO) சலவை யந்திரம். (Washing Machine) விலைரூபா 9000/- 24, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 9449

அரியாலை மணியந்தோட்டத்திற்கண்மையில் 4 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்கட்குதொடர்பு கொள்க. Navatkuli Medical Centre (Opposite Railway Station) Navatkuli, Kaithady 9448

திருநெல்வேலிச் சந்தியில் வியாபார நிலையம் கட்ட மிக உகந்த காணித்துண்டும் (நாலு லட்சம்) 9 ஸ்ரீ வோக்ஸ்வகன் காரும்விற்பனைக்கு. தொடர்பு: 73/1, பலாலி றேட், கந்தர் மடம். 9409

வவுனியா 2-ம் குறுக்குத் தெருவில் ஸ்ரீ முருகன் தியேட்டருக்கு அண்மையில் கல் வீட்டுடன் கூடிய 5 பரப்பு வளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஈஸ்வரன் ஏஜன்ஸி, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா. 9462

திருநெல்வேலி சந்திக்கருகாமையில் 2 பரப்பு காணித்துண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும்விலாசம்: C. மகேஸ்வரன் 133, கன்னதிட்டி றேட், யாழ்ப்பாணம். 9464

12 ஸ்ரீ Datsun sunnyB 211 குளிரூட்டியுடன் விற்பனைக்குண்டு தம்பிராஜா ''அருட்ஜோதி'' பொற்பதி றேட். கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 9467

அத்தியடி புதுவீதி, இல. 10 யாழ்ப்பாணத்தில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மனையமைக்க வசதியாக ¾ பரப்பாகவும் பிரித்து விற்கப்படும். இதைவிட நன்கு வியாபாரம் நடைபெறக் கூடிய கடையும் விற்பனைக்குண்டு. விபரம் நேரில். 9463

மானிப்பாய் முதலியார் கனகசபை வீதியிலுள்ள 7 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: வரேந்திரன், 363, நாவலர் வீதி, நல்லூர். 9429

உயிலங்குளம் மோகன் தியேட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி பரமானந்தம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார் 9363

கண்டி வீதியில் கச்சேரிக்கு அருகாமையில் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் மகேந்திரன், 18/1, கச்சேரிகிழக்குஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 9417

## தேவை

சகல வசதிகளுடன் 3அல்லது 4 அறைகளைக்கொண்ட வீடு யாழ். மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்குத்தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9468 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 9468

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடனும் கூடியவீடு வாடகைக்குதேவை. விண்ணப்பிக்கவும். தரகர்களும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல; 9465 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9465

தச்சுத் தொழிலாளர்களும் உதவியாளர்களும் உடன் தேவை. தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். மயூரா தச்சுத் தொழிற்சாலை ஆலடிச்சந்தி மானிப்பாய். 9366

கிளிநொச்சியிலுள்ள சில்லறைக் கடைக்கு தெளிவாக எழுதக்கூடிய சிட்டை விகிதர் உடன் தேவை. சகல சான்றுப் பத்திரங்களுடன் 10-00—4-00 மணிக்கிடையில் நேரில்வரவும். 104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 9457

புதிய பாவித்த வீடியோ கசற், ரெலிவிசன், வீடியோ டெக் பாவிக்க முடியாத ரெலிவிசன் என்பனவும் நியாய விலையில் வாங்கப்படும். விலை குறித்து முழு விபரங்களுடன் விண்ணப்பிக்குக. விளம்பர இல: 9458. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9458

யாழ்ப்பாணத்தில் பஸ் போக்கு வரத்துக்கருகாமையில் மின்சார குடிநீர் வசதிகளுடன் ஒருவருட காலத்திற்கு உடனடியாக வீடு தேவை. தொலைபேசி வசதி விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9474, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9474

அமெரிக்க கொம்பனிக்கு ஒரு வருட காலத்திற்கு சகல வசதிகளுடனும் யாழ்ப்பாணத்தில் உடனடியாக வீடு தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9473, மே/பா. ஈழநாடு, யாழ்ப்புாணம். 9473

## வைத்தியம்

சிறுநீரக ரோகங்கள், ரொன்சில் விஷகடி ஆகியவற்றுக்கு உத்தரவாதமான சிகிச்சை பெற Dr. J. Constantine, சங்கானை றேட், அச்சுவேலி. 8953

**POST OF MEDICAL OFFICER KAYTS CO-OP. HOSPITAL (SINNA MOOLAI)**

Resident Medical Officer with experience and ability to do emergency Surgery on Maternity patients required. Accomodation provided. Salary negotiable. Apply before 28-10-1983.

PRESIDENT,
M.P.C.S. LTD., KAYTS.
9436

### சீன சஞ்சிகைகள்

சீன சஞ்சிகைகளுக்கு 1984-ம் ஆண்டுக்கான சந்தாக்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு சந்தாதாரருக்கும் அழகிய சீனக் கலண்டர் ஒன்று அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும்.

விபரங்களுக்கு:
**யாழ். புத்தக நிலையம்,**
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(9389)

## வாடகைக்கு

வெலிங்டன் அண்மையில் கடை குத்தகைக்கு நிந்தம் கொடுப்பவர் சந்திக்கவும். இரத்தினம், சின்னத்துரை கடை, 209, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 9117

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்க கிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9404

## வகுப்புக்கள்

Pharmacists External Examination யாழ்ப்பாணத்தில் ஆரம்பவகுப்பு/மீட்டல் வகுப்பு வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும் தொடர்புகொள்ளவும். (முத்திரை ஒட்டிய விலாசத்துடன் கூடிய கடித உறையுடன்) முகவரி; Pharmed Academy, 562-A, Aluthmawatte Road, Colombo-15, 9444

Piano வும், Accordian னும் சனி, ஞாயிறு உட்பட. திருமதி தோமஸ், கதிரை மாதா கோவிலின் வாயிற்புற வீதி, சில்லாலை. (மகளிர் மட்டும்). 8914

## WANTED

Partly qualified Accountant in early forties with over 20 years experience in Private and State Sector seeks employment as Accountant or in Management Capacity. Write to Advt No: 9469 C/o. Eelanadu, Jaffna. 9469

**கடுகு சிறிது காரம் பெரிது!**

**POWER GLUE**

ஒரு துளியால்,
ஒரு நொடியில்
எந்தப் பொருளையும்
ஒட்டலாம்!
அதிசக்தி வாய்ந்த
உறுதியான ஒட்டும்
திராவகம்!
**வடபகுதி எங்கும்
ரூ, 35க்கு
விற்பனையாகிறது!**
வியாபாரிகளுக்கு
விசேட கழிவுண்டு
கடிதத்தில்
தொடர்புகொள்ளவும்:-
**க. பரராசசேகரன்**
9/8, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
9441

## கல்வி

வயரிங் மோட்டார் மெக்கானிசம் காலை வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறுகின்றன. புதிய மாணவர்கள் 25-10-83ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க பொறியியல் கல்வி நிலையம் Engineering Education Centre யாழ்ப்பாண கல்வி நிலைய கட்டிடம் சாந்திதியேட்டர் அருகாமை 22, ராமையா செட்டியார் லேன் யாழ்ப்பாணம், விரிவுரையாளர் S. C. இம்மானுவேல் B.Sc. (Cey) Electrical and Automobile Engineer. 9422

The Enghish Language Academy, V.C. Lane Kopay. (1) வெளிநாட்டில் பட்டம் பெற்று பிஎச். டி சான்றிதழுடன்நாடுதிரும்பியுள்ள(பெண்) வரால் ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன(2)வகுப்புகள் துரிதமாக இடம்பெறுகின்றன. ஆங்கில மொழி. இலக்கியம், G. C. E. (O/L, A/L.), G. A. Q., B. A. (English), Spoken English வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான மாலை நேர விசேட வகுப்புக்கள் Also Beginners French. 9472

உடுவில், மானிப்பாய் வீதி, வண. சாமுவேல் இளையதம்பி ஞாபகார்த்த இல்லத்தில் நவம்பர் மாதம் தொடக்கம் பின்வரும் வகுப்புகள் நடைபெறும். Builders Quantity Surveying (London City and Guilds Exam) Draughtsmanship Diploma. க. பொ. த. உயர் தரத்தில் கணிதம், பௌதிகம் படித்தவர்கள் சேரவிரும்பின் 2-11-83 புதன் காலை 9-30 மணிக்கு மேற்படி இல்லத்துக்கு வரவும். 9476

## முக்கிய அறிவித்தல் மின்விநியோகம்

1983ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல்2-00மணி வரை முக்கியபராமரிப்பு வேலைகள்செய்யும்பொருட்டு அனுராதபுரம்-யாழ்ப்பாணம் 132 கே. வி. மின்மார்க்கம் துண்டிக்கப்படவிருப்பதால் கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, சுண்ணாகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணைபோன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி, யாழ். பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் மின்சாரவிநியோகம் தடைப்படும் என அறியத் தருகின்றேன்.

**மின்பொறியியலாளர்,**
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுண்ணாகம்.
9460

**வடமராட்சி மாணவர்க்கோர் நற்செய்தி !!**

SPECIALLY FOR SCHOOL LEAVERS
FIRST TIME IN POINT PEDRO
**at SCIENCE CENTRE**
DIPLOMA IN
**Computer Programming**
காலம் :- 5 மாதங்கள்
: பாடநெறி :
**BASIC-COBOL-R.P.G. I & II**
**ஆரம்பம் : 5-11-83**
விபரங்களுக்கு :- நேரில்/தபாலில்
**SCIENCE CENTRE**
PONNUCHAMY KODDAM,
Point Pedro.
9301

### இந்தியாவின் உறுதிப்பாட்டை குலைக்க

# நாட்டுக்குள்ளும், வெளியிலும் தீயசக்திகள் முயற்சி!

## பம்பாய் இ. காங்கிரஸ் கூட்டத்தில் இந்திரா எச்சரிக்கை

பம்பாய், அக். 22

''இந்தியாவின் உறுதிப்பாட்டைக் குலைக்க உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இயங்கிவரும் தீயசக்திகள் குறித்து இந்திய மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பம்பாயில் நேற்றுஇடம் பெற்ற அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினர்.

திருமதி காந்தி தொடர்ந்து பேசியதாவது:-

'பிரிவினை, வகுப்புவாத, மதச்சார்புள்ள தீயசக்திகள் இந்தியாவின் உறுதிப்பாட்டைக் குலைக்கச் சதிசெய்துவருகின்றன. இச்சக்திகளில் சில வெளிநாடுகளிலும் தமது நடவடிக்கைகளுக்காகப் பயிற்சி பெற்றுள்ளன.

இவைகுறித்து மக்கள் மிகவும் விழிப்பாகவும், நாட்டு நலன்கருதிப் பொறுப்புணர்ச்சியுடனும் இருக்கவேண்டும். இந்தியா எந்தவொரு நாட்டையும் ஆக்கிரமிக்கும் அல்லது, ஒரு நாட்டின் உள்நாட்டு விடயங்களில் தலையிடும் நோக்கமுடையதல்ல.

மகாத்மா காந்தியடிகள் காட்டிச் சென்ற அகிம்சா வழியிலேயே இந்தியா தொடர்ந்தும் சென்றுகொண்டிருக்கின்றது. குறுகிய அரசியல் நோக்கம்கொண்ட மதச்சார்பு மற்றும் வகுப்புவாத, பிரிவினைவாதச் சக்திகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது.

வெளிநாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தவரை இந்தியா அணிசேராக் கொள்கையிலேயே தீவிர நம்பிக்கை கொண்டது. வல்லரசுகளின் மிரட்டல்களுக்கு இந்தியா பணிந்துவிடாது'' என்றுர்.

திருமதி காந்தி மேலும், இந்தியாவின் எளிய பிரிவினர்கள் நன்கு கவனிக்கப்படவேண்டுமென்றும், ஒவ்வொரு கிராமமும் சுயதேவைப் பூர்த்தியடைய வேண்டுமென்றும் விருப்பம் தெரிவித்தார். (கி)

# வட ஈராக் இராணுவநிலைகள் ஈரானிடம் வீழ்ச்சி

தெஹ்ரான், அக். 22

வடக்கு ஈராக் பிரதேசத்தில் உள்ள ஈராக்கிய இராணுவ நிலைகள் பலவற்றை ஈரானிய இராணுவம் கைப்பற்றியுள்ளதென்று தெஹ்ரானிலிருந்து இராணுவ அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையை ஈரானின் சபாநாயகர் ஜனுப் அலி அக்பர் வெளியிட்டார்.

ஈராக் பிரான்ஸிடமிருந்து ஐந்து நவீன போர் விமானங்களை வாங்கியதன் எதிரொலியாக வடக்கு ஈராக்கில், ஈரானியப் படைகள் நடத்திய தாக்குதல்களையடுத்தே பல ஈராக்கிய நிலைகள் ஈரானியப் படைகளிடம் வீழ்ச்சியடைந்தன என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

வடக்கு ஈராக்கில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 2500 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயப்பட்டிருக்கலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டது. ஈரான் - ஈராக் போருக்குப் பலாத்காரமாகச் சமாதானம் காணவும், ஈராக்கின் கையை மேலும் பலப்படுத்தவும் முனையும் பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு வடஈராக் தாக்குதல்கள் சிறந்த படிப்பினையாகும்'' என்று ஈரான் சபாநாயகர் கூறினர்.

இதேவேளை ஈரானின் அறிக்கையை ஈராக் மறுத்துள்ளது. ஈரானில் நடத்தப்பட்ட அனைத்துத் தாக்குதல்களும் முறியடிக்கப்பட்டன வென்றும். ஈராக்கிய நிலைகள் எதுவும் வீழ்ச்சியடையவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

### இந்தி நட்சத்திரம்

# சைரா பானுவின் கைப்பை அமெரிக்காவில் வழிப்பறி!

மியாமி, அக். 23

பிரபல இந்தி திரைப்பட நட்சத்திரம் சைரா பானுவின் கைப்பை அமெரிக்காவின் புளோரிடா மாநில நகரமான மியாமியில் கறுப்புஇன திருடன் ஒருவனல் அபகரிக்கப் பட்டது.

சைரா அவருடைய தாயாரான நஸீம் பானுவுடன் மியாமி ஹில்டன் ஹோட்டலுக்கு வெளியே தமது சகாக்கள் சிலரை எதிர்பார்த்து நின்றுர். தாயார் நஸீம் பானுவே சைராவின் கைப்பையைவைத்திருந்தார்.

அப்போது அவர்களை அறியாமல் அருகேவந்த காரொன்றிலிருந்து இறங்கிய கறுப்பு இன இளைஞனெருவன் நஸீம் பானுவின் கையிலிருந்த பணப் பையைப் பறித்துக் கொண்டு தான்வந்த காரிலேயே ஏறித் தப்பினன்.

இச்சம்பவத்தை சைராவை நோக்கிவந்த அவரது சகா டிலிப்குமார் நேரேகண்டு உதவிக்கு விரைந்துவந்தார். ஆயினும் அத்திருடன் முந்திவிட்டான்.

பறிக்கப்பட்ட அப்பையில் சைராவினதும் அவரது தயாரினதும் பெறுமதிமிக்க ஆபரணங்கள் இருந்தன. அவற்றுடன் பலநூறு ரூபாய் பெறுமதியான டாலர்களும் இருந்தன. இச்சம்பவத்தை விசாரித்த பொலிசார் அத்திருட்டுப் பேர்வழிக்கு அவன்திருடியவற்றில் பெறுமதிகூடியதாகசைராவின் கைப்பையே இருந்திருக்கும்என ஊகம்தெரிவித்தனர். (கி)

### திருகோணமலை இடைத்தேர்தல்:

# முன்னுள் எம்.பி.சம்பந்தனே மீண்டும் நிறுத்தப்படுவார்!

## சென்னையில் அமிர் தகவல்

சென்னை, அக். 22

திருகோணமலையில் இடம் பெறவிருக்கும் பாராளுமன்ற இடைத் தேர்தலில் இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திருகோணமலை முன்னுள் எம். பி. திரு. ஆர். சம்பந்தனையே மீண்டும் வேட்பாளராக நிறுத்துவதென்று சென்னையில் கூடிய இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'பொலிட் பீரோ' தீர்மானித்தது.

திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு. ஆர். சம்பந்தன் தொடர்ச்சியாக மூன்று யாதங்கள் பாராளுமன்றம் செல்லாததாலும், தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிராகச் சத்தியப் பிரமாணஞ் செய்யாததாலும் தமது பாராளுமன்ற அங்கத்துவத்தை இழந்தார். இதனைத் தொடர்ந்தே அத்தொகுதியில் தனது உறுப்பினர்கள் எவரையும் த.வி.கூ. நியமிக்காததையடுத்து இடைத்தேர்தல் அங்கு நடைபெறவுள்ளது.

த.வி.கூ. பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் இது பற்றி மேலும் கூறியதாவது:-

''பிரிவினைக் கொள்கையை எதிர்த்துச் சத்தியப் பிரமாணஞ்செய்ய வேண்மென்ற நியந்தனையை இலங்கை அரசு கைவிட்டால் மட்டுமே திரு. ஆர். சம்பந்தன் திருகோணமலை இடைத்தேர்தல் தொகுதியில் போட்டியிட அனுமதிக்கப்படுவார்.

அரசாங்கம் தனது நிபந்தனையை மாற்ருவிட்டால் இடைத் தேர்தலில் போட்டியிடும் ஒரு சுயேட்சை வேட்பாளரைத.வி.கூ. ஆதரிக்கும்.அவ் வேட்பாளர் பின்னர் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பார்'' என்றுர்.

திரு. அமிர்தலிங்கம் திருகோணமலைத் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி கவனஞ்செலுத்தாவிட்டால் அத்தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை ஒரு சிங்களவர் பெற்றுவிடுவாரென்றும் குறிப்பிட்டார். (கி)

### யாழ், உதவி அரசு பிரிவு:

# 5-ம், 6-ம் கட்ட உணவுப் பொருள் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

கடந்த கலவரத்தினல்இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம்உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வந்துவசிப்பவர்களில் 5ம், 6ம் கட்ட உணவுப்பொருட்கள் பெறத்தகுதியுள்ளவர்களுக்கு புதிய அனுமதிப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபரினல் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றைப் பெற்றுள்ளவர்கள் தங்களுக்கு ஏற்கனவே உணவுப்பொருட்கள் வழங்கப்பட்ட அதே சங்கங்களில் சென்று தமது 5ம், 6ம் கட்ட உணவுப்பொருட்களை பெற்றுக் கொள்ளலாமென யாழ்ப்பாணம் உதவிஅரசாங்க அதிபர் தெரிவிக்கின்றுர். அரசாங்க, கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர் தவிர்ந்த சிறிய வர்த்தகர்களுக்கும், சுயதொழில் செய்து பாதிப்படைந்தோருக்குமேஇப் புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# காந்திய இயக்க கட்டிட தளபாடங்கள் திருட்டு

(வவனியா)

வவனியா கோவில் குளத்திலுள்ள காந்திய சிறுவர் இல்லக்கட்டிடத் தளபாடங்கள் சில விஷமிகளால் களவாடப் படுகின்றன.

பலலட்ச ரூபாய் பெறுமதியான குறிதத கட்டிடத்தில் இயங்கிவந்த காந்திய இயக்கத்திற்குத் தடை விதிக்கப் பட்டு இருப்பது தெரிந்ததே. குறித்த கோவில்குளம் காந்திய கட்டிடம் அரசினல் சுவீகரிக்கப்பட்டதாக முன்பு தெரிவிக்கப்பட்டது. தற்போது கட்டிடம் யாருடைய பொறுப்பில் இருக்கின்றது எனத் தெரியவில்லை.

அங்கு எரிந்த நிலையிலுள்ள உழவு இயந்திரங்களின் சில உதிரிப்பாகங்களும் கூடத் திருடப்பட்டுள்ளன.

### வட்டமேசை மகாநாட்டில்

# சமசமாஜக் கட்சி ஏன் கலந்துகொள்ளவில்லை?

## செயலாளர் ஜனதிபதிக்கு விளக்கம்

(கொழும்பு)

தமிழர் பிரச்னை தொடர்பான வட்டமேசை மகாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன கலந்துகொள்ளாதினலேயே தமது கட்சி கலந்து கொள்ளவில்லையென லங்கா சமசமாஜக் கட்சிச் செயலாளர் திரு. பெர்னட் சொய்ஸா தெரிவித்துள்ளார்.

இவர் ஜனதிபதி ஜெ.ஆர். ஜெயவர்த்தனவுக்கு தமது கட்சி ஏன் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்பது பற்றி எழுதிப கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளாா.

இந்த மூன்று கட்சிகளும் கலந்து கொள்ளாத பொது ஐ. தே. கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும், தமது கட்சியும் சேர்ந்து எந்தவித ஆக்கபூர்வமான திட்டமெதனையும் நிறைவேற்ற முடியாதென்பதினல் தமது கட்சி கலந்து கொள்ளவில்லை எனத் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சூ)

பவர்ஸ் உரம்
அதிக விளைச்சலுக்கும்
கூடியஇலாபத்துக்கும்
MASTERS ABC 4/82 (C)
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

# நேர்மை இன்னமும் செத்துவிடவில்லை!

அனுபவக் கட்டுரை

நா. மாணிக்க இடைக்காடர்

பாலை வனமாகிய சூடானில் கடமையாற்றும் பொழுது எங்களைப் போல் அவ்விடம் கடமை யாற்றிய தமிழ்நாடு பேராசிரியரின் மனைவி ஒரு சம்பவத்தை கூறினர். அது என்மனதில் பதிந்தது.

ஒரு தனவந்தரின் மகன் பத்து வயதுக்குள்ளே தானிருக்கும் பம்பாயில் பாடசாலைக்கு பஸ் வண்டி மூலம் போவது வழக்கம். ஒரு பின்னேரம் வீடு திரும்புவதற்கு பஸ் வண்டியில் ஏறினன். பிழையான வண்டி என்று அப்பொழுது அப்பையனுக்கு தெரியவில்லை. நன்ருக இருண்ட பிறகு வண்டி பம்பாய் பட்டிணத்திற்கு அப்பால் ஒரு கிராமத்தில் நிற்பாட்டப்பட்டு எல்லோரையும் இறங்க சொன்னர்கள். பையன் இறங்கியதும் அழுதான். அந்த நேரத்தில் ஒரு பால் வியாபாரி அவ்விடம் வந்தான். பையன் தனக்கு நேர்ந்ததை சொல்ல அம்மனிதன் அன்று இரவு தன் வீட்டில் தங்கி தானே அவனை பையன் வீட்டிற்குக் கொண்டு போய் விடுவதாகக் கூறினன். அப்படியே தங்கி மறுநாள் காலையில் பஸ் நிற்கும் இடத்திற்கு போகும் வழியில் பால்வியாபாரியின் சினேகிதன் மஹாராஷ்டிர மொழிப்பத்திரிகை ஒன்றை காட்டினன். இதில் இப்பையனின் படம் போட்டிருந்தது. பையனை கண்டு பிடித்துகொண்டு வருபவருக்கு ஆயிரம் ரூபா இனமாம்.

வீட்டில் பையனை பாரம் கொடுத்து ஆயிரம் ரூபா பெற்றுக்கொண்டு வீடு திரும்பி மனைவியிடம் பணத்தை நீட்டினன். என்ன சங்கதி என்று அந்த அம்மாள் கேட்டாள் நடந்ததை கூறினன். 'ஐயோ, கடவுளே அனதை போல் அப்பிள்ளை இருந்ததும் நாங்கள் நாங்கள் அபயம் கொடுத்ததிற்கும் பணமா—முடியாது — இது இந்து தர்மமில்லை இப்பணத்தை திருப்பிக் கொடுக்க விட்டால் உலையே வைக்க மாட்டேன். வேணு மென்றல் இருதடவை பபாய்க்கு பஸ் வண்டியால் சென்றதிற்குகாகிய பணத்தை வாங்குங்கள், இப்பவே பணத்தை கொடுங்கள் என்ருள் அந்த தர்மபத்தினி.

அப்படியே அம்மனிதனும் செய்தான். இந்த சம்பவம் இராமாயணத்தில் நடக்க வில்லை, மஹா பாரதத்தில் எழுதப்படவில்லை — இந்த இருபதாம் நூற்ருண்டில் சில ஆண்டுகளுக்கு முன் காந்தி அடிகள் வாழ்ந்த பூமியில் நடந்தது. நேர்மையும், தர்மமும் இன்னும் நடமாடுவதற்கு ஒரு எடுத்துக் காட்டு.

## 'வெட்கம்' தந்த சம்பவம்

இன்னுமொரு சம்பவம் கூற விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்கு முன் சென்னை பட்டணம் போயிருந்தேன். அப்பொழுது எனது மூத்த மகளுக்கு வீணை வாங்க வேண்டியிருந்தது. ஒரு சினேகிதனுடன் ஒரு டாக்சியில் வீணை விற்கும் தாபனத்திற்கு சென்று வாங்கினேம். வருகிற வழியில் வேறு சில பொருட்கள் வாங்க வேண்டியிருந்ததால் கையோடு வாங்கிப் போகலாமென்றேம். தேவையான கடையயடைந்ததும் டாக்சியை நிறுத்தச் சொன்னேம், நாங்கள் இறங்கினதும் மோட்டர் வண்டி அவ்விடத்தில் நிறுத்த முடியாததால் தள்ளிப்போய் நிப்பாட்டுகிறேன் என்று கூறிவிட்டு டாக்சி போய்விட்டது. அந்நேரத்தில் வெறென்றும் யோசிக்காமல் பொருள் வாங்கிக் கொண்டிருந்தோம். அப்பொழுது தான் யோசித்தோம் முன்பின்தெரியாத டாக்சிக்காரன் வீணையுடன் ஓடிவிட்டால் என்ன செய்யலாமென்று எவ்வளவு கெதியில் பொருள்களை வாங்க முடியுமோ வாங்கிக் கொண்டு சிறுதூரம் நடக்க டாக்சிக் காரனை சந்தித்தோம். அவன் உடனே நான் இங்கே தான் நிற்கிறேன். பயப்படாமல் வாங்கோ உங்களுடைய வீணைக்கு பயந்தீர்களா அப்படிப்பட்ட பயம் இப்பகுதியில் இல்லையென்று கூறினன். நாங்கள் ஒரு விதத்தில் வெட்கப்பட்டோம் மறுவிதத்தில் சென்னையின் நேர்மையை மெச்சினேம்.

## நேர்மையால் வரும் ஊதியம்

இது போன்ற நல்லெண்ணங்கள் நேர்மைக் குணங்கள் உடனே வருவதில்லை, பெற்றேர், ஆசிரியர் அக்கம் பக்கத்தில் இருப்போரிடமிருந்து இளமையில் வித்திட்டு வந்தால் தான் முறையே வளரும் வியர்வை சிந்தி தேடும் பொருள் தான் எங்களுடையது மற்ற பொருளுக்கு நாம் உரிய வரல்ல என்று காந்தியடிகள் அடிக்கடி கூறுவார். இருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டு போன மாதிரி நேர்மையால் பெறும் ஊதியத்துடன் நேர்மையில்லாமல் பெறும். ஊதியத்தைசேர்த்தவுடன் இரண்டுமில்லாமல் போய்விடும். இந்தக் கசப்பான உண்மையை பலர் உணர்வதில்லை. நாட்டில் பெரியவர் என்று கூறிக்கொள்பவர்கள் பொதுமக்களுக்கு தங்கள் வாழ்க்கையால் சாதனைகாட்ட வேண்டும். எங்களில் எத்தனை பேருக்கு தெரியும் மறைந்த இந்திய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்குஒரு வங்கிக்கணக்கு இருக்கவில்லையென்று மாதாமாதம் செலவுக்கு தேவையான பணத்தை அரசிடமிருந்து பெற்றுக்கொள்ளுவார். இந்தத் தொகைஅவருடைய மாதாந்த சம்பளத்திற்குமிகவும்குறைவு. அவர் இறந்ததும் கூடப்பாதிக்கப்பட்டவர் அவர் தாயார். பாரத அரசு அந்தத்தாய்க்கு உதவிப்பணம் வழங்குகிறது.

## பாலித்தீவு அனுபவம்

இந்த இடத்தில் நானும் எனது பாரியாரும் பலமுறை பாலித்தீவிற்கு போன அனுபவங்களில் ஒன்றைக்கூற விரும்புகிறேன். இந்தத்தீவு ஜாவாத் தீவுக்குகிழக்கேயுள்ளது. சனத்தொகை இருபது இலட்சம், தொண்ணூற்றைந்துவீத மக்கள் இந்துக்கள் தலைநகரம் டென்பசாரிலிருந்துபத்துமைல் தொலைவில் பாலித்தீவின் சிறந்த கலைப்படைப்புக்கள் (முக்கியமாக சிலைகள்) விற்பனைக்குண்டு நாங்கள் போன அன்று விடுமுறைநாள் கடையில் ஒருவருமில்லை ஆனல் திறந்திருந்தது. அந்த நேரத்தில் ஒருமாது அவ்வழியாக வந்தார். நாங்கள் இந்தோ

(5-ம் பக்கம் பார்க்க)

★ பிள்ளையார் லக்ஸரி பயணச்சேவை

தினசரி காலை, இரவுச் சேவை.

இரண்டு பஸ்கள்
தினசரி சேவையில் ஈடுபடுகின்றன.

யாழ்ப்பாணம் —— கொழும்பு
காலை 7-00 மணி — மாலை 4-00 மணி
இரவு 7-00 மணி — காலை 5-00 மணி

கொழும்பு —— யாழ்ப்பாணம்
காலை 7-00 மணி — மாலை 4-00 மணி
இரவு 7-00 மணி — காலை 4-00 மணி

கட்டணம் ரூபா 100-00

டிக்கட் பதிவு செய்யுமிடங்கள் :

யாழ்ப்பாணம் :

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
போன் : 23166

செல்வா ஸ்ரோர்ஸ்
02, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன் : 23810

கொழும்பு :

கே. இராசையா
மரக்காலை—
5, லில்லி அவனியு,
வெள்ளவத்தை.
போன் : 85188

அஜந்தா ஹொட்டல் லிமிட்.
கோட்டை,
கொழும்பு.
போன் : 28089,—32679.

# இன்றும் நாளையும் கீரிமலையில் பெரியபுராண சிறப்பு மாநாடு

(கீரிமலை)

கீரிமலை சிவநெறிக் கழகத்தின் பெரிய புராணச் சிறப்பு மாநாடு கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோயில் மண்டபத்தில் இன்று ஞாயிறும் நாளை திங்களும் நடைபெறவுள்ளது.

கழகத்தின் பிரதித் தலைவர் பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் டாக்டர் எஸ். சண்முகசுந்தரன் தொடக்கவுரையாற்றுவார். கழகத்தலைவர் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் கொடியேற்றுவார். பிரம்மஸ்ரீ ந. குமாரசாமிசர்மா திருமறை ஓதுவார். செல்வி. நாகம்மா கதிர்காமர் திருமுறை ஓதுவார். புராணபடனப்போட்டி, கதாப்பிரசங்கப் போட்டி, கதை சொல்லல் போட்டி, சிவத்தொண்டுப் போட்டி, ஏடு எழுதும் போட்டி என்பனவும் இடம்பெறும். துர்க்காதுரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாகுட்டி 'சேக்கிழாரும் பெரிய புராணமும்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். நாதஸ்வரகான கலாநிதி கலாசூரிய என். கே. பத்மநாதன் பர்சில்களை வழங்குவார். இறுதியாக திருமதி. சிவபாக்கியம் பாலநாதன் திருமுறை ஓதுவார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் விசேட பூசையைத் தொடர்ந்து திரு. வை. கணேசலிங்கத்தின் திருமுறை ஓதுதலுடன் ஆரம்பமாகும். திரு ஏ விஸ்வநாதன் தொடக்க உரையாற்றுவார். தொடர்ந்து பெரிய புராணம் இடம்பெறும்.

பெரிய புராண மகத்துவம் பற்றி திரு கு குருசாமியும், பெரிய புராண செய்யுள் நயம் பற்றி வித்துவான் க. சொக்கலிங்கமும், பெரியபுராண தத்துவம்பற்றி திரு. ச. விநாயகமூர்த்தியும் சொற்பொழிவாற்றுவார்கள். (புலோ-அ

★ நம்பிக்கை ★ நாணயம்
★ நன்மதிப்பு

SHABRA' UNICO FINANCE LIMITED

உங்கள் முதலீட்டிற்கு பாதுகாப்பையும் நம்பிக்கையையும் உயர்ந்த வருமானத்தையும் தருவது

'SHABRA'

கவர்ச்சிகரமான வட்டிவிகிதங்களில் நிலையான வைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

எதுவித சிரமமும் இன்றி உங்களுக்கு உடனடியாகப் பயன்படாத பணத்தின் மூலம்

ஒரு நிரந்தரவருமானம் பெறலாம்.

தொழிலில் இருந்து ஓய்வுபெற்றவராயின் உங்களது ஒய்வூதிய பணத்தை முதலீடு செய்து எதுவித கவலைகளும் இன்றி

நிரந்தரமான மாதாந்த வருமானம் பெறலாம்.

தவணைமுறையில் சகல பொருட்களையும் பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு - 4.
தொ. பேசி. இல: 589310

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பேசி. இல: 22073

# திட்டமிட்ட முறையில் பனை அபிவிருத்தி

கற்பகதருவாகிய எமது பனை நாட்டில் முக்கியமான பாரம்பரிய மூலவளங்களுள் ஒன்ருகும். இதன் பயன்பாடு அளப்பரியது. இதனை எமது மக்கள் நன்குணர்ந்த போதிலும், பனைவளத்தை நாம் திட்டமிட்ட முறையில் விவசாய நோக்கோடு பராமரிக்காது விட்டுவிட்டபடியினுலேயே பனைவளத்தின் பயனை நாம் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியாது போய் விட்டது. இந்நிலையிலும் பனைவளம் இன்று சர்வதேச ரீதிமான வர்த்தகத் தொடர்பைப் பெற்று வருகின்றது.

இவ்வேளையில் நாம் அதிக பனைமரங்களை வளர்க்சுக் கூடுதலான பயன்களைப் பெற முயலவேண்டும். இதனைநோக்கமாகக் கொண்டே பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ, இராசதுரையின் பணிப்பின்மீது பனை அபிவிருத்திச் சபை பனம் விதை நடுகை இயக்கத்தை ஆரம்பித்து உள்ளதுடன் பனம் விதைநடுகை வாரமாக இம்மாதம் 24-ம் திகதியிலிருந்து 31-ம் திகதி வரையும் பிரகடனப்படுத்தியுள்ளது, இப்பனை நடுகை வாரக் காலத்தில் நாம் ஒவ்வொருவரும் விவசாயத்திற்கு உகந்ததாக இல்லாத எமது காணிகளில் அல்லது வேறு எவ்விடத்திலாவது வேலி ஓரங்களில் குறைந்தது பத்துப் பனம் விதைகளையாவது நாட்டிப் பனைவள அபிவிருத்தியில் எமது பங்களிப்பையும் செலுத்த வேண்டுமென்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 5,150,300 பனைகளும் 2,195,500 வடலிகளும் உள்ளன, (1983 யூன் 8-ம் திகதி மதிப்பீடு) இதில் நாளொன்றுக்கு சராசரியாக 100 பனைமரங்கள் பல்வேறு தேவைகளுக்காக தறிக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை இதனுல் பயன்பெறுவோர் அதிகரிக்கின்றனர். அதிகரிக்கின்ற சனத்தொகைக்கு ஈடாக பனைமரங்களையும் நன்கு பேணிப் பாதுகாப்பதுடன் பனம்விதைகளையும் நடவேண்டியது அவசியம்.

இக்கற்பகதருவைத் திட்டமிட்ட முறையில் விவசாய நோக்கோடு நாட்டி வளர்ப்பதன் மூலம் எமக்கு மட்டுமன்றி, எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் நன்மை செய்தவராவோம்.

எஸ். கிருஷ்ணமூர்த்தி
(செயலர்-ப. அ. சபை)

## திருடர்கள் தொல்லை அதிகரிப்பு

(மட்டுவில்)

மட்டுவில் பகுதியில் கோழி, ஆடு திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது. ஆரம்பத்தில் சில கோழிகளைத்திருடி வந்த திருடர்கள் இப்பொழுது கூண்டோடு திருடும் அளவுக்கு முன்னேறியுள்ளனராம்.

மட்டுவில் தெற்கிலுள்ள இரு வீடுகளில் ஒரே இரவில் சுமார் 20க்கும் அதிகமான கோழிகளையே கூண்டோடுதிருடிய சம்பவம் நிகழ்ந்துள்ளது.

# கிருமிநாசினி கலந்த கௌபி கைப்பற்றப்பட்டது

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பகுதியைச் சேர்ந்த இரு வர்த்தக நிலையங்களிலிருந்து கிருமிநாசினி கலந்த 54 கிலோ கௌபி கைப்பற்றப்பட்டது.

காங்கேசன்துறைப் பகுதியில் கிருமிநாசினி கலந்த கௌவி விற்பனைசெய்யப்படுவதாக பொதுமக்களிடமிருந்து முறைப்பாடு கிடைத்ததையடுத்து காங்கேசன்துறை அபிவிருத்திச்சபை உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு, வ. இராமச்சந்திரன் இதுபற்றி கண்காணிப்பு மேற்கொள்ளுமாறு உபஅலுவலக சுகாதார பரிசோதகரிடம் கோரியிருந்தார்.

இதற்கமைய காங்கேசன்துறைப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. த. மகாதேவனும், மற்றும் உபஅலுவலக வருமானவரி உத்தியோகத்தர்கள் ஞானப்பிரகாசம், வாமதேவன் ஆகியோரும் இப்பகுதி வர்த்தக நிலையங்களில் கண்காணிப் மேற்கொண்டு இரு வர்த்தக நிலையங்களிலிருந்து 54 கிலோ கௌபியை கைப்பற்றினர்.

இதில் கிருமிநாசினி கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து மேலும் பரிசோதனைக்காக கொழும்புக்கு சிறிதளவு கௌபியை அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

மிகுதி கௌபி புதைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இப்பகுதி வர்த்தக நிலையங்களில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# நேர்மை இன்னமும் செத்துவிட ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னேஷியா மொழி பேசுவதால் அம்மாதோடுஉரையாடினேம். ஏன் கடை திறந்தபடியிருக்கிறது, இவ்வளவு பொருட்களையும் யாரும் திருடமாட்டார்களாவென்று வினுவினேம்'' அதற்கு அம்மாது சிரித்துவிட்டு இது எங்கள் கடை அதாவது இக்கிராம மக்களுக்கு பொதுவானகடை ஆகையால் நாங்கள் ஏன் திருடப்போகிறேம். தனியார் கடையாய் இருந்தாலும் திருடுவதில்லை. இந்தப்பழக்கமே இத்தீவில் கிடையாதுஅத்தீவு மக்கள் எல்லோரும்தனவந்தரில்லை பொருள் குறைந்தவர்களுமுண்டு. ஆனுல் களவு கிடையாது இவர்கள் இந்தியாவிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வந்ததாகக் கூறுகிறுர்கள். அடுத்தடுத்த் தீவுகளில் களவுஉண்டு. ஆனுல் இத்தீவில் மாத்திரம் கிடையாது. பாலியில் ஓரளவு உணவுண்டு. மற்றும் வசதிகள் கணிசமாகவுண்டு. இவர்களுக்கு வாழ்க்கையில் திருப்தி. பகலில் ஏதோ விவசாயத்தில் ஈடுபடுவார்கள். பின்னேரங்களிலும் இரவிலும் ஆண், பெண், பிள்ளைகள் எல்லோரும் நடனமாடுவார்கள். இவர்களின் இராமாயண நடனம் உலகப்பிரசித்தி பெற்றது. பகலில் வேலையும் இரவில் நடனமும் மனத்தில் திருப்தியும் இருப்பதால் களவுக்கு இடமில்லை. எல்லாமே நேர்மை. இவை எல்லாம் பார்த்து நேருஜீ இத்தீவைப்பற்றி ''இது உலகின் காலை, இதுதான் உலகின் கடைசிச் சுவர்க்கம்'' என்று கூறினுர்.

நாமேன் யாழ்ப்பாணத்தை ஒரு பாலியாக மாற்ற முடியாது. பேராசைகள் வேண்டாம் திருப்தி வேண்டும். வி"'ர்வை சிந்தாமல் பணம் சம்பாதிக்க வேண்டுமென்பதை மனதிலிருந்து அகற்றவேண்டும். காந்தி அடிகளின் அறிவுரைகளை மதித்து வாழவேண்டும். மற்றவர்கள் எங்களைப்பார்த்து மதிக்க வேண்டும். நாங்கள் எங்களைப் பற்றி யோசித்து மதிக்கக்கூடியவர்களாக வாழ்கிறேமாவென்று உணரவேண்டும். பலருக்கு பிரசங்கம் செய்யத் தேவையில்லை. ஒவ்வொருவரும் நேர்மையுடன் வாழ்ந்தால் போதும்.

# இரு கொலைவழக்குகளில் எதிரிகள் பிணையில் விடப்பட்டனர்

(வவுனியா)

பாவற்குளம் யோகநாதன் என்பவரைக் கொலை செய்ததாகவும், சிவஞானம் என்பவரைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் சந்தேகத்தின்மீது கைதான மாணிக்கவாசகர், சிவலிங்கம், பரமகுரு ஆகிய மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இரண்டாம், மூன்றும் எதிரிகள் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பிணை மனுவை வவுனியா மேல்நீதிமன்றத்தில் நீதிபதி திரு.ஜே. ஜி. ஆசீர்வாதம்முன்னிலையில் சட்டத்தரணி கனக. மனேகரன் தாக்கல்செய்து வாதாடினுர். இதனைத்தொடர்ந்து 2ம், 3ம் எதிரிகளை ஐயாயிரம் ரூபா பிணையில் செல்வதற்கு வவுனியா கோர்ட்டு நீதவானுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## பாண் வியாபாரி கொலை வழக்கு

பாண் வியாபாரி அப்துல்லா கொலை தொடர்பான வழக்கிலும் எதிரிகள் இருவரையும் ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல வவனியா மேல்நீதிமன்ற நீதிபதி அனுமதி வழங்கினுர்.

குணசேகரம், இராஜரத்தினம் ஆகிய இருவரும் பாண் வியாபாரியான அப்துல்லா என்பவரைக் கொலைசெய்ததாகச் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு, வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

வவனியா நீதிமன்றத்தில் நடந்த அடையாள அணிவகுப்பின்போது சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்பட்டார்கள்.

''சந்தேகநபர்களுக்கு எதிரான சாட்சியம் பலவீனமானது இக்கொலைக்கு நேரில் கண்கண்ட சாட்சியம் இல்லை. இவர்கள் சம்பவம் நடந்த இடத்தில் கைது செய்யப்படவில்லை. குறித்த இருவரும் முன்குற்றம் இல்லாதவர்கள். குடும்பப்பொறுப்பு உள்ளவர்கள்'' என்று அவர்கள் சார்பில் பிணைமனுவைத் தாக்கல் செய்து வாதிட்ட சட்டத்தரணி கனக மனேகரன் தெரிவித்தார்.

மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ஜே ஜி. ஆசீர்வாதம் எதிரிகளை ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கினுர்.

அரசதரப்பில் சட்டத்தரணி திரு. சிறீஸ்கந்தராசா ஆஜராஞர். (அ)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் நீலிப்பந்தனை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 26-ம் திகதி காலைநடைபெறவுள்ளது

கும்பாபிஷேகத்தை நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் நடாத்திவைக்கவுள்ளார். (வெ

## இரும்புக் கேற்றுகள் திருட்டு!

(மாவிட்டபுரம்)

கோவிலுக்கு சொந்தமான இரும்புக்கேற்றுகள் இனந்தெரியாதவர்களால் இரவு நேரம் திருடிச்செல்லப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவிலுக்குச் சொந்தமான 5,000 ரூபா பெறுமதியான நான்கு இரும்புக் கேற்றுகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இது குறித்து கோவில் பூசகர் இரத்தினஐயர் காங்கேசன்துறை பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது சம்பந்தமாக 3 சந்தேகநபர்களைத்தேடி காங்கேசன்துறைப் பொலிசார் வலைவிரித்துள்ளனர்.

## நன்கொடைப் பணம் வழங்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பகுதியில் இயங்கிவரும் சனசமூக நிலையங்களுக்கு 1982-ம் ஆண்டிற்கான உதவி நன்கொடைப்பணத்தை உடன் வழங்குவதற்கான நடவடிக்கையை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எம். மயில்வாகனம் மேற்கொண்டுள்ளார்.

இதற்கான விபரங்களைத் தமக்கு விரைவில் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்களின் செயலாளர்களை அவர் கடித மூலம் கேட்டுள்ளார். (சூ)

## பனம் விதை இலவசம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப்பகுதியில்பனம் விதைகளை நட்டு உண்டாக்க விரும்பும் பாடசாலைகள, ஆச்சிரமங்கள், சபைகள் மன்றங்கள் மற்றும், தனிநபர்களுக்கும் 26-10-83ல் மில்க்வைற் ஸ்தாபனத்தார் இலவசமாக கிளிநொச்சியில் விநியோகிப்பார்கள் தேவையானேர் மேற்படிஸ்தாபனத்துடன்தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றன.

## ரஸ்ற் ட்ரவல் சேர்விஸ்

11/A மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி ரேட்,
யாழ். நகர்
T. P. 24111

தலைமைக்கந்தோர்
65, சதாம் வீதி
ஹைதிராமணி ஆர்காட்,
கொழும்பு-1.

உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம் அதுவே எங்கள் ஸ்தாபனத்தின் பெயருமாகும்.

- ஏரோபுளட்,செக் கோசிலவேக்கியாவிமானக் கம்பனிகளின் பிரதான ஏஜன்டுகளாக இருப்பதனுல் குறைந்த செலவுடன் விமான டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பிராக், பெல்ஜியம் விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- குறைந்த கொமிஷனில் ரவலர்ஸ் செக் செய்து தரப்படும்.
- அதிகப்படியான மத்திய கிழக்கு டிக்கட்டுக்களில் $13\frac{1}{2}\%$ கழிவு தரப்படும்.

நம்பிக்கையின் சின்னம்

## ஸ்ரான்லி பேர்ணிஷிங் பலஸ்

தளபாட விற்பனையில் சாதனை நிலைநாட்டியவர்கள்

உங்களுக்குத் தேவையான

- மகாராஜா குஷன் செற்றிகள், மற்றும் பல்வேறு விலைகளில் (2000/- முதல் 11,500/- வரை) பெற்றுக்கொள்ளலாம்.
- சாப்பாட்டு மேசைகள் (1200/- — 1400/-)
- அலுமாரிகள் (2000/- — 7,500/-)
- மெத்தைகள்
- அலுவலக தளபாடங்கள் (1000/- — 1250/-) என்பனவற்றை

சிறப்புடன் தெரிவு செய்து கொள்ள இன்றே நாடுங்கள்.

## ஸ்ரான்லி பேர்ணிஷிங் பலஸ்

5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன் : 23763

குறிப்பு : (எமது ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் இல்லவே இல்லை)

பாவனையாளர் சங்க உறுப்பினரே

# வர்த்தகரின் நெறியற்ற செயலைக்கண்டுபிடிக்கமுடியும்

(ய.ழ்ப்பாணம்)

''பாவனையாளரே கடைகளுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் அடிக்கடி சென்று வருபவர்கள். எனவே, பாவனையாளர் சங்க உறுப்பினரே வர்த்தகரின் நெறியற்ற செயல்களைக் கண்டு பிடிக்க முடியும். இவர்கள் அதிகாரம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். இது சட்டமுறைப்படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இதனைச் செயல்படுத்தும் நடைமுறையை வர்த்தக அமைச்சு அமைக்கவேண்டும் ''

இவ்வாறு யாழ் மாவட்ட பாவனையாளர் சங்கங்கள் சமாஜத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், அதன் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசகங்கம் தலைமை உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''யாழ்ப்பாண உள்நாட்டு திணைக்களத்தினர் உத்தியோக தோரணையில் மிகப் பலம் வாய்ந்தவர்கள், சட்டத்தின் உதவி அவர்களுக்கு இருக்கிறது. நேர்மையற்ற வர்த்தகர்களை நீதியின் கரங்களுக்கு இட்டுச்செல்வது அவர்களின் கடமை. ஆனுல் பாவனையாளர் சங்க உறுப்பினர்களோ இதனைப் பொறுத்தமட்டில் பலம் அற்றவர்கள். நாங்கள் காவல் செய்பவர்சளாக மாத்திரம் இருக்கிறோம். எங்களிடம் எங்களுக்கு வேண்டிய அதிகாரம் இல்லை. இதன் காரணமாக வர்த்தகர்களோ அல்லது வேறு அந்த திணைக்களமோ எம்மைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. எந்தப் பிரச்சனையையும் நாம் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பணிக்கும்போது அதனைத் தட்டிக்கழித்து வருவதிலிருந்து எமது கருத்துவெளிப்படை. இந்த நிலையில் எங்கள் நிலை என்ன? எங்களுடைய சங்கம் பொது மக்களின் நன்மை கருதி செயல்படுவதினுல் எங்களுடைய விசாரணைகளை, எந்த திணைக்களமோ, தனியார் அரசாங்க நிறுவனங்களோ உடனுக்குடன் கவனித்து ஆவன செய்தல் வேண்டுமென வர்த்தக அமைச்சு ஒரு அறிக்கை விடுமா?''

''இன்று பொருட்களின்விலை நாள்தோறும் ஏறிக்கொண்டே போகிறது. வரையறுக்கப்பட்ட விலை குறிப்பிடப்பட்ட பொருட்களின் விலை மாதத்துக்கு மாதம் ஏறிக்கொண்டு போகிறது. சில வேளைகளில் நேற்று இருந்த விலை இன்று இல்லை. சென்ற கிழமை இருந்தவிலை இந்தக்கிழமை இல்லை. மக்களுக்குத் தெரியாமலே சிலவற்றின் விலை நித்திரைவிட்டு எழுமுன்னரே கூடிவிடுகிறது இவ்விலை மாற்றங்கள் பாவனையாளர்கள் சங்க உறுப்பினருக்கே தெரிவதில்லை. இதை வாய்ப்பாகப் பாவித்து வர்த்தகர்கள் தாம்விரும்பிய விலைக்கே விற்கிறுர்கள். இந்த நிலையில் சங்க உறுப்பினர்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இதனுல் சங்க உறுப்பினர்கள் பொது மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய நிலையில் இல்லை. இதனுல் சங்க உறுப்பினர்கள் உற்சாகமாகத் தமது கடமையைச் செய்யும் சூழல் இன்று இல்லை. எனவே விலையேற்றம் வருடத்துக்கு ஒரு முறையேதான் மாத்திரம் நடைபெற வேண்டும்.''

கல்வயல்

# கொலை, கொள்ளை வழக்கு: தொடர்ந்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

கல்வயலில் இடம்பெற்ற கொலை, கொள்ளை வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில், ஜூரிமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அனுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றும் எஸ். ஆனந்தக்குமாரசுவாமி, இவ்வழக்கு விசாரணைக்காக விசேஷமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

1975-ஆனி 29-ம் திகதி கல்வயலைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை என்பவரைக் கொலை செய்ததாகவும், அவரது மனைவி இராசம்மாவின் உடைமையான 450 ரொக்கப்பணத்தையும், 3,200 ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்ததாகவும், இவற்றுக்காகக்கூடிச் சதிசெய்ததாகவும் ஆக 4 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, ஆறு சந்தேகநபர்சுள் மீது சாவகச்சேரிப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சி. தங்கேஸ்வரன்(கல்வயல்), கு. சிவபாதம்(மீசாலை), க. கந்தசாமி(நுணுவில்), ச. மாணிக்கசிவம் (நுணுவில்), சு. சிவபாலன்(மீசாலை), சு. நகுலேந்திரன்(அராலி) இந்த ஆறு சந்தேகநபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

1-ம், 2-ம், 6-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி இ. சிறீசிவாயா, 3-ம், 4-ம், 5-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆகியோர் ஆஜரானுர்கள்.

அரசாங்க தரப்பில் அரசசட்டத்தரணி ஸ்ரீ ஸ்கந்தகுமார் ஆஜரானுர். (மா)

## கூட்டம்

(சாவகச்சேரி)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலய வருடாந்தக் கூட்டம் இன்று காலை காரைநகர் சுப்பிரமணிய வித்தியசாலை மண்டபத்தில் திரு. வி. எம். சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ளது

பிரதம பேச்சாளராக ஆத்மஜோதி முத்தையா கலந்து கொள்ளவுள்ளார். இக்கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும். (வெ)


புதிய லக்ஸ்பிறே 500




100 கிராம் மேலதிகம்.

500 கிராமிற்கான விலையோ 26,00 சதம் மட்டுமே. செறிவும், செழுமையும் மிகுந்தவாய்ப்பாடு
புதிய லக்ஸ்பிறே (26% பாற் கொழுப்பு நிறைந்தது)

★ ஈரலிப்பு, துர்நாற்றம், பக்ரீறியாத்தாக்கம் என்வற்றைத்தடை செய்யத்தக்க முப்படைகளான பையில் அடைக்கப்பட்டு வெளிவருகிறது.

★ நைதரசன் வாயுவுடன் சேர்ந்து அடைக்கப்படுவதால் நீண்ட காலச் சேமிப்பிற்கு உகந்தது,
தீவு பூராவும் [illegible] கிடைக்கிறது.

எடை போட்டுப் பார்க்க சில உண்மைகள்.

சந்தைப்படுத்துவோர்
லங்கா மில்க் ஃபூட்ஸ் (சீ.டப்ளியூ.ஈ) லிமிட்டெட்.
வெலிசர, ருகம, இலங்கை.

# யாழ். சென்ஜோன் படையில் 2000 பேர் பணிபுரிகின்றனர்!

## ஆணையாளர் சுகந்தன் தகவல்

(பண்டத்தரிப்பு)

'யாழ். மாவட்டத்தில் எமது சென். ஜோன் அம்புலன்ஸ் படையில் முதலுதவிப் பயிற்சியை பெற்றவர்கள் சுமார் 2000 பேர்வரை இருக்கின்றனர். தற்போது மேலும் பல பகுதிகளிலும் நடைபெற்று வரும் பயிற்சி வகுப்புகளில் பல இளைஞர்களும், யுவதிகளும் ஆர்வமுடன் பங்குபற்றி வருகின்றனர்,'

இவ்வாறு சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் பொதுக் கூட்டம் திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய சென், ஜோன் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி குறிப்பிட்டார். திரு. கே. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டததில் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தொடர்ந்து பேசியதாவது, 'முதலுதவிப் பயிற்சி பெறுபவர்கள் சான்றிதழ்களைப் பெறுவதை மட்டும் கருத்திற் கொள்ளாது தாம் பெற்ற பயிற்சியை மக்கள் சேவைக்கு நன்கு பயன்படுத்தமுன் வரவேண்டும். அண்மைய கலவரங்களினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் எமது மாவட்டத்திற்கு அகதிகளாக வந்துள்ளார்கள். இவர்களின் நல்வாழ்வுக்காக எமது தொண்டர்கள் இரவு பகலாக சேவையாற்றி வருகின்றனர். எமது படையில் முதலுதவிப் பயிற்சியை பெற்ற யுவதிகள் பலர் இருக்கின்றனர். அவர்களும் தாம் பெற்ற பயிற்சியை மக்கள் சேவைக்கு பயன்படுத்த முன்வரவேண்டும்' என்ருர்,

இக்கூட்டத்தில் புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கு கொழும்பிலுள்ள சென். ஜோன் அம்புலன்ஸ் படையினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களும் கையளிக்கப்பட்டன. படையின் பிரதேச வைத்திய அதிகாரியாக யாழ். அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எஸ். ஏ, எம். இலங்கைஇரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார், வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி இயக்குணர் திரு. எம். ஜி, பிள்ளைநாயகம் படையின் பொருளாளராக நியமிக்கப்பட்டார். பிரிவு மேற்பார்வையாளராக கடமையாற்றிய திரு, ஜே. எம். பி. பாக்கியராசா பிரிவு அத்தியட்சகராக நியமனம் பெற்றுள்ளார், (கி)

# மாதகல் பகுதியில் கடத்தல் முயற்சி அதிகரிப்பு

[மாவிட்டபுரம்]

மாதகல் பகுதியில் கடத்தல் முயற்சிகள் அதிகரித்து வருவதால் காங்கேசன்துறைப் பொலிசார் அப்பகுதியில்தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர்.

மாதகல் கடற்கரைச் சந்தியில் வைத்துச் சைக்கிளில் எடுத்துவரப்பட்ட 65 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபிடவைகளைப் பொலிசார்கைப் பற்றியிருந்தனர். இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டுச் சைக்கிளில் வீடுகளுக்கு எடுத்துச் செல்லும்போதே இவை அகப்பட்டன.

இதுதொடர்பாக இரு நபர்களும் கைதுசெய்யப்பட்டுப் பொருட்களும் நபர்களும் காங்கேசன்துறை சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

காங்கேசன்துறை சுங்க அதிகாரிகள் பொருட்களுடன் இந்நபர்களை யாழ். உதவி சுங்க சேகரிப்பாளர் முன்னிலையில் ஆஜர் செய்தசமயம் இருவருக்கும் 23 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுப் பொருட்கள் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

இதன் பின்னர் மாதகலிலிருந்து பண்டத்தரிப்பு வழியாக மினிபஸ் ஒன்றில் கடத்தல் பொருட்கள் எடுத்துச்செல்லப்பட்ட சமயம் அதனையும் காங்கேசன்துறைப் பொலிசார் கைப்பற்றிக்கொண்டனர்.

இந்த மினிபஸ்ஸில் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 2,803 சாரங்களும், 36 ஆம்

(8-ம் பக்கம் பார்க்க)

## குண்டகசாலை தமிழ்மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குண்டகசாலை இலங்கை விவசாயக் கல்லூரி தமிழ்மாணவர்கள் தமது எதிர்கால நடவடிக்கள் தொடர்பாக ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதற்காக இம்மாதம் 24-ம் திகதி திங்கட்கிழமை காலை திருநெல்வேலி விவசாய பாடசாலையில் கூடவுள்ளனர். (சூ)

## முல்லைத்தீவில் இளைஞர் விசாரணையில்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் இளைஞர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் ஆயுதப்படையினர் கைது செய்துள்ளனர்.

பத்திரிகை நிருபரானபுத்தி சிகாமணி என்ற இவ்விளைஞர் இப்பொழுது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

## பாதிக்கப்பட்ட ஊழியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரங்களால் இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்களின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்காக பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு இன்று யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் இக்கூட்டத்தில்கலந்து கொள்ளுமாறு இடம்பெயர்ந்த ஆசிரியர்களையும் மேற்படி இணைப்புக்குழு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஊடாகக் கேட்டுள்ளது.

இக்கோரிக்கைக்கு இணங்க சகல இடம்பெயர்ந்த ஆசிரியர்களையும் இக்கூட்டத்தில்கலந்து கொள்ளுமாறு தமிழர்ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் கேட்டுள்ளார். (மா)

## மரம் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மரம் நாட்டும்விழா கல்லூரி அதிபர் திரு. வி. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக தொழிலதிபர் திரு. க. கனகராஜா கலந்து கொண்டு மரம் ஒன்றை நாட்டி விழாவை ஆரம்பித்து வைத்தார். (மா)

## யாருடையது?

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவரது சாரதிலைசென்சும், ரெக்ரைவ்ஸ் கோப்பரேசனைச் சேர்ந்த ஒருவரது அடையாள அட்டையும் யாழ்பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது' உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

0 0 0

கோப்பாயைச்சேர்ந்த திரு. என். இராசலிங்கம் என்பவர் ஒரு மூக்குக்கண்ணாடியை இருபாலை ஆசிரிய கலாசாலை வீதியில் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்

உரியவர் அலுவலக நேரத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

லதா (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

இதுவே கடைசி வாரம்
ராஜா [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
[கலர்]

100வது நாளைத் தாண்டி
ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
சகலகலா வல்லவன்

கடைசி வாரமாகவும், பார்க்காதவர்களுக்கு இது ஒரு கடைசி சந்தர்ப்பமாகவும் காட்சியளிக்கிறது.
றீகல் (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
Dogs of War
WAR FILM—COLOR
Next:
FROM HERE TO ETERNITY

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5-00, 7-15
"RAID ON ENTEBBE"
in
Operation Thunderbolt
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.
Passess Concessions suspended.

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எஸ்.எஸ்.ஆர்- விஜயகுமாரி
நானும் ஒரு பெண்
(புதிய பிரதி)
25-10-83 முதல்
சரத்பாபு - சுமனலதா
திசை மாறிய பறவைகள்

லிடோ (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
விடியும்வரை காத்திரு

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6 30
கமலஹாசன் - ஸ்ரீதேவி
குரு
From 25th
36th CHAMBER OF SHAOLIN

சாந்தி யாழ்நகர்
10.30, 2.30, 6.30,
சந்திரசேகர், சுகாசினி, ராஜீவ்
"பாலைவனச் சோலை"
வண்ணப்படம் - புதியபிரதி


ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00
சிவாஜி — ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்
Soon
"IT COULD HAPPEN TO YOU"
Film on V. D.

சிறந்த முறையில், நவீன டிசைன்களில்
"ரெருசோ மாபிள் நிலம்"
அமைக்க நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்
த ரெருசோ கொன்ருக்ரேஸ் & கொன்சல்ரன்ஸ்
THE TERRAZZO CONTRACTORS AND CONSULTANTS
69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Specialist in Terrazzo Flooring According to CP 240

கலர் புகைப்படங்களை குறைந்த செலவில் குறுகிய காலத்தில்
PROCESSING AND PRINTING
செய்து நயமடைய நாடுங்கள்!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.
(9172)

## 31ம் நாள் நினைவஞ்சலி

இளைப்பாறிய ஆசிரியை
திருமதி செ. தெய்வானைப்பிள்ளை



தோற்றம்: 14-07-1913

மறைவு: 24-9-1983

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு"

என்பதற்கிணங்க

இவ்வுலக வாழ்வை 24-9-83ல் நீத்த திருமதி செ. தெய்வானைப்பிள்ளையின் 31ம் நாள் கிரியைகள் 24-10-83இல் கீரிமலையிலும் அன்னாரது இல்லத்திலும் நடைபெறுகின்றது. அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

கலைவாணி றோட், தையிட்டி, காங்கேசந்துறை.

மகனும் குடும்பத்தினரும்

9402

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 23199
தந்தி: 'வைரம்'

# ஹோட்டல்முதலாளிவீட்டில் ரூ79,000நகைகள்கொள்ளை!

## மோட்டார் சைக்கிள் இளைஞர் கைவரிசை!!

(யாழ்ப்பாணம்)

பிரபல ஹோட்டல் உரிமையாளர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த இரு இனந்தெரியாத நபர்கள், இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி துப்பாக்கி முனையில் தாலிக்கொடி சங்கிலி உட்பட 78 ஆயிரத்து 400ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கந்தர்மடம் அரசடி வீதியில் உள்ள ரி. அருளானந்தம் என்பவர் வீட்டிலேயே இக்கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத நபர்கள் வீட்டுக்கதவைத்தட்டி திறக்கும்படி சொன்னார்களாம். அச்சமயம் அவ்வீட்டில் ஆண்கள் எவரும் இருக்கவில்லை. கதவு திறக்கப்பட்டதும் உள்புகுந்த நபர்கள் இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி பணம் தேவை எனக் கேட்டபோது அங்கிருதந் மூன்று பெண்களும் இப்பொழுது ஆண்கள் எவரும் இல்லை என்றும் வேறொரு தினத்துக்கு வரும்படியும் சொன்னார்களாம். எங்களுக்கு இப்பொழுதுதான் தேவை எனச் சொல்லிய இருவரில் ஒருவர் தான்வைத்திருந்த கைத்துப்பாக்கியை அங்கு நின்ற பெண்களின் முன்னிலையில் நீட்டி ''உயிர்வேண்டுமா? நகைவேண்டுமா?'' என்று பயமுறுத்தினராம்.

பீதியடைந்தபெண்கள்தாங்கள் அணிந்திருந்த நகைகளைக் கழற்றி அவர்களிடம் கொடுத்ததும் இருநபர்களும் வந்திருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி தலைமறைவாகிவிட்டனர். இவ்வாறு யாழ் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொள்ளைக்குப் பயன்படுதப்பட்ட மோட்டார் சைக்கிள் எவரிடமிருந்தாவது கடத்தப்பட்டிருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர். பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

## கடையில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் உள்ள கடை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

85ஸ்ரீ 3566 இலக்கமோட்டார் சைக்கிளில் சென்ற இரு இனந்தெரியாத நபர்கள் இயக்கம் ஒன்றின்பெயரைச்சொல்லி கொள்ளை அடித்ததாக கடை உரிமையாளர் நவரத்தினம் சுன்னாகம் பொலிசில் புகார் செய்துள்ளார். கொள்ளை அடிக்கப்பட்ட பணத்தொகை குறித்து பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்ட புகாரில் குறிப்பிடவில்லையாம். (மா)

### இடம் பெயர்ந்த

## தனியார்துறை ஊழியருக்கு சொந்த இடங்களில் வேலை!

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களம் இதுவரை எடுத்துள்ள புள்ளி விபரப்படி 2,226 பாதிக்கப்பட்ட தனியார்துறை ஊழியர்களின் விபரம் கிடைத்துள்ளதாகவும், அவர்களில் 64-க்கு மேற்பட்ட தரத்தினர் உள்ளதாகவும் தொழில்திணைக்களத்தின் ஆணையாளர் திரு. எஸ். பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டஊழியர்களின் இணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேற்குறிப்பிட்ட தகவலைத் தெரிவித்தார்.

இக்கூட்டம் பாதிக்கப்பட்ட இணைப்புக்குழுத் தலைவர் திரு. க. இராசசிங்கம் தலைமையில் யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலுள்ள பணிமனையில் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களின் நலனைக் கவனிப்பதற்காக திரு. சிவபாஸ்கரன் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அவர் மேலும் பேசுகையில், பாதிக்கப்பட்ட "தனியார் துறை ஊழியர்களில் பலருக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பாதுகாப்பான இடங்களிலும் பொருத்தமான வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு இப்பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்களினதும், கைத்தொழில் நிறுவனங்களினதும் அதிபர்களைச் சந்தித்துக் கோரிகை விட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களின் விஷயமாக அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் அவர் விளக்கம் கூறினார். (மா)

### மாதகல் பகுதியில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சட் பனியன்களும் இருந்தன.

மினிபஸ்ஸையும், இப்பொருட்களையும் இவற்றுடன், கைதான இருநபர்களையும் பொலிசார் காங்கேசன்துறை சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களிருவரும் யாழ். உதவி சுங்கசேகரிப்பாளர்முன் ஆஜர் செய்யப்பட்டசமயம் தலா 2,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு மினிபஸ்ஸும் பொருட்களும் பறிமுதல்செய்யப்பட்டன.

இச்சம்பவங்களையடுத்தே காங்கேசன்துறைப் பொலிசார் மாதகல் பகுதியில் கடத்தல் முயற்சிகளைத் தடுக்கத் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

### மட்டுநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து மீட்டுள்ளதாக அச்சுவரொட்டியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

'மக்கள் விடுதலைப் படை' அறிவித்தல் என்ற சிகப்பு நிற துண்டுப்பிரசுரத்திலும், சிறை உடைப்புக்கு, இப்புதிய இயக்கம் உரிமை கோரியுள்ளது. இம்மாதம் 22ம் தேதியிட்டு இத்துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. இத்துண்டுப் பிரசுரங்களும், பஸ் நிலையம், பொதுச்சந்தை போன்ற முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி சுன்னாகம், கொடிகாமம்,பருத்தித்துறை மற்றும் பல இடங்களில் நேற்று முன்தினம்இரவு இச்சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும் ஒட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

## சர்வதோஷ நிவாரணயாகம்

(மாவிட்டபுரம்)

இலங்கைவாழ் தமிழ்மக்கள் இன்று அடைந்துள்ள கஷ்டங்களிலிருந்து நிரந்தர நிவாரணம் பெறவேண்டிசர்வ தோஷ நிவாரணயாகம் அளவெட்டியில் இன்று நடைபெறவுள்ளது,

அளவெட்டி ஸ்ரீசுப்பிரமுனிய ஆச்சிரமத்தினரின் ஏற்பாடாக நடைபெறவிருக்கும் இவ்யாகம் அளவெட்டி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்யாகத்துக்கான ஏற்பாடுகளை ஆச்சிரமமுகாமையாளர் திரு. வே. கனகநாயகம் செய்துள்ளார். (வெ)

## இவைகளின் விலை!

(கொழும்பு)

மதுபானம் விற்பனவுசெய்வதற்கு உத்தரவுபெற்ற மதுபானக் கடைகளில், அதி விசேட சாராயம் 35 ரூபாவுக்கும், தென்னஞ்சாராயம் 40 ரூபாவுக்குமே விற்கப்பட வேண்டுமென அரசாங்க வர்த்தமானி மூலம் பதில் மதுவரி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்த விலைகளை விடக் கூடுதலான விலைக்கு இவையும், மற்றும் சில சாராய வகைகளும் விற்கப்படுவதாகப் பாவனையாளர் புகார் தெரிவித்துள்ளனர்.

### இலங்கைத்தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டுத் தலைவர்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகள் மிகப் பயனுள்ளவையாகும்.

''ராஜினுமாக்கள், பாதயாத்திரைகள் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னையைத் தீர்க்க முடியாது.

''இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை குறித்து ஆலோசனை நடத்துவதற்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் விசேட தூதுவர் திரு ஜி. பார்த்தசாரதியை மீண்டும் இலங்கைக்கு வருமாறு அழைக்கும்படி நான் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் தெரிவிக்கவுள்ளேன்'' என்றார்.

''நான் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின்பிரதிநிதியாக இங்கு வந்துள்ளதாகச் சில பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன. இது தவறானதாகும்'' என்றும் திரு தொண்டமான் சொன்னார்.

இலங்கைத் தமிழர்கள் கௌரவமாகவும், தன்மானத்துடனும் வாழ வேண்டுமென்பதில் கூட்டணியும், நானும் ஒரே கருத்தையே கொண்டுள்ளோம்'' என்றும் அவர் சொன்னார். (வெ)

ஆங்கிலத்தில் 'பி. எல். ஏ.' என்ற எழுத்துக்கள் சுவரொட்டிகளில் காணப்பட்டன. (க-வெ)

### ஓட்டுமாவடி வங்கியிலிருந்த

## டிராக்டரில் இரும்புப் பெட்டியைக் கடத்தினர்! பொலிஸ் மடக்கிப் பிடித்தது!!

(மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம்)

கிழக்கு மாகாணத்திலுள்ள ஓட்டமாவடி பல. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில்நேற்று அதிகாலை ஒன்றரைமணி அளவில் காவலாளிகள் இருவரைக் கட்டி வைத்துவிட்டு வங்கியை உடைத்து அங்கிருந்த இரும்புப்பெட்டியொன்றை டிராக்டரில் மூன்று ஆயுதம்தாங்கிய இளைஞர்கள் கடத்திச்சென்றார்கள!

கட்டிவைக்கப்பட்ட காவலாளி ஒருவர் தன்கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு வாழைச்சேனை பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்ததை அடுத்து அரைமணி நேரத்துக்குள் விரைந்தபொலிஸார் டிராக்டர் போன பாதையைப் பின்தொடர்ந்து காடொன்றுக்குள் வைத்து டிராக்டரை இரும்புப்பெட்டியுடன் மடக்கிப்பிடித்தனர். ஆனால் இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இளைஞர்கள் எவரும் பொலிஸாரிடம் அகப்படவில்லை.

வங்கியில் மூன்று இரும்புப் பெட்டிகள் இருந்ததாகவும், நகைகள், பெருமளவு பணம் இருந்த இரு இரும்புப்பெட்டிகளை விட்டு ஆக ஏழாயிரம் ரூபாய் இருந்த இந்த இரும்புப் பெட்டியை இளைஞர்கள் எடுத்துச்சென்றதும் தெரியவந்துள்ளது.

### மேற்கிந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுகளைவீழ்த்தினர்.

மேற்கிந்தியதீவு கோஷ்டி தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 454 ஓட்டங்களை எடுத்தது. கிறீன்டிஜ் 194, மார்ஷல் 92 ஓட்டங்களை எடுத்தனர். கபில்தேவ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (சூ)

### வள்ளுவன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பப்பட்ட அவரது பேட்டியிலிருந்து தெரியவந்தன.

அந்தக்கடிதத்தில் பல பரபரப்பான தகவல்களைப்பெற்றுக்கொண்டதாகவும், பயங்கரவாதத்துக்கும் தமிழர் கூட்டணிக்கும் தொடர்பு இருப்பது இதன்மூலம் தெரியவந்துள்ளதாகவும் அமிர்தலிங்கம் நாடு திரும்பியதும் விசாரிக்கப்படுவாரென்றும் அரசு அறிவித்திருந்தது,

இந்தக் கடிதம் தொடர்பாக மாவை சேனாதிராஜாவும் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

வள்ளுவனிடம் பகீரதன் கொடுத்துவிட்ட மற்றுமிரு கடிதங்களும் இரு நாட்களின் பின் வெளியிடப்பட்டன.

வள்ளுவன் கைதுசெய்யப்பட்டபோது, அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட அவருடைய உடைமைகளைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது தாயார் மகேஸ்வரி ஆனையிறவு முகாமில் சென்று பெற்றுக்கொண்டார்.

மலேஷியாவில் விரிவுரையாளராக இருக்கும் வள்ளுவனின் தந்தை இராசலிங்கம், அங்கு நீண்டகாலமாக வசித்து வருகிறார். வள்ளுவன் இனி அங்குதான் உயர் படிப்பைத் தொடருவார் எனத் தாயார் தெரிவித்தார்.

### ஆயிரக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''இந்தியா, இலங்கைத் தமிழர் பிரச்னையை முன்வைத்து இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடமுனைகிறது என்று இலங்கை குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் இந்தியாவுக்கு அதன் அயல் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் எண்ணமில்லை.

இலங்கையில் இடம்பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவு வழங்குவதாக இலங்கை குற்றஞ்சாட்டுகிறது. ஆனால் பயங்கரவாதம், பிரிவினைவாதம், வன்முறைகள் என்பவற்றை இந்தியா எதிர்க்கின்றது.

இலங்கைத் தமிழர் பிரச்னையைச் சுமுகமாகத்தீர்க்க இந்தியா அதன் விசடே பிரதிநிதியாக திரு. ஜி. பார்த்தசாரதியை இலங்கை அரசுடன் பேச நியமித்துள்ளது. அவருடன் இலங்கை அரசுதொடர்ந்துபேச்சுக்களை நடத்தி இலங்கை தமிழர்களின் பிரச்னைக்கு தீர்வுகாணவேண்டும்'' என்றார். (கி)

### முகமூடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் இரகசியப்பொலிஸ் என்றும் வீட்டைச் சோதனையிடப் போவதாகவும் கூறி, சோதனையிட்டதாகவும் பின்னர் இவரது தம்பியின் வீட்டில் துப்பாக்கிமுனையில் சோதனை நடத்தப்பட்டதாம். அங்கு ஒன்றும் கிடைக்காமையால் திரும்பிவந்து தம்பிராஜாவின் வீட்டிலிருந்த தாலிக்கொடியையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு தாங்கள் புலிப்படையைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிசில் முறைப்பாடுசெய்யக்கூடாதென்றும் எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றனராம்.

இச்சம்பவம் தொடர்பாக சப் இன்ஸ்பெக்டர் ஆர். எஸ். ஜெயபாலன் தலைமையில் காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணைநடத்திவருகின்றனர்

## மரண அறிவித்தல்

### திருமதி லிடியா இராசம்மா இராசரத்தினம்

திருமதி லிடியா இராசம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற S. P. இராஜரத்தினத்தின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும், இராசமலர், Dr. இராஜக்கோன், இராஜசேனன், தேவி, ஸ்ரெலா, பியற்றிஸ் ஐறீன் ஆகியோரின அன்புத் தாயாரும், காலஞ்சென்ற எதிர்நாயகம் மில்ஸ், றூபி, மணி, கதிர்காமர், சேனாதிராஜா, குலேந்திரன், ஜீவநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார், அன்னாரின் பூதவுடல் தபால் கந்தோர் வீதி, மானிப்பாய் இல்லத்திலிருந்து திங்கட்கிழமை (24-10-83) 4 மணியாளவில் மரண ஆராதனையின் பின் நல்லடக்கத்திற்காக மனிப்பாய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். (9492)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Number B 100236/81. Eelanadu-P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389—24126.